RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ஐங்குறுநூறு குறிஞ்சித்திணை காட்டும் வாழ்வியல்

**சா. யோக பிரியா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி - 626124, இந்தியா

# The Philosophy of Life in the Kurinji Thinai of Ainkurunuru

**S. Yoga Priya [a, *]**

[a] Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College (autónomo), Sivakasi – 626124, India

* Corresponding Author: yogapriyasaminathan2001@gmail.com

**ABSTRACT**

Human beings share a common experience of birth, yet the circumstances and manner of death cannot be said to be the same for all. Within the Tamil intellectual tradition, the attitude expressed through the courageous declaration "I do not fear death" reflects a distinctive understanding of mortality. At the same time, death remains one of the fundamental realities that human beings confront. Philosophy may be understood as a framework through which the various dimensions of human existence between birth and death are examined and understood. It provides an intellectual means of enriching human life by bringing together the dimensions of knowledge, physical existence, and ethics. From this philosophical perspective, the present article examines the life and worldview represented in the Kurinji Thinai of Ainkurunuru. The Kurinji landscape, associated with the mountainous region in the Sangam thinai system, provides a distinctive cultural setting for understanding human relationships, emotional experiences, social practices, and ways of life. The poems of Ainkurunuru portray the relationship between human beings and their natural environment while expressing the inner experiences and ethical dimensions of life. This study therefore seeks to explore the life philosophy, human values, emotional experiences, and cultural practices reflected in the Kurinji poems of Ainkurunuru. It examines how the landscape, human relationships, and lived experiences represented in the poems contribute to a broader understanding of Tamil philosophical thought concerning human existence.

**Keywords:** Kurinji, Thinai, Ainkurunuru, Human Values

## முன்னுரை

சங்க இலக்கியம் காட்டும் சங்க மக்களின் வாழ்க்கைப் பகுப்பு அகம், புறம் என்னும் பிரிவுகளுக்கு உட்பட்டது. அவற்றுள் அகமானது களவு, கற்பு என பகுக்கப்படுகின்றது. கற்பு வாழ்வே அகத்தில் மேலோங்கிய தன்மையைப் பெற்றது என்பதை மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு மருவின் இனிய வுளதோ என்னும் அடிகள் உணர்த்துகின்றன. சங்க காலத்தில் கற்பு அறமாகப் பார்க்கப்பட்டது என்பதற்கு இல்லறம் என்ற சொல்லே பெரும் உதாரணம் ஆகும். திருவள்ளுவரும் இல்வாழ்கை என்னும் அதிகாரத்தில் அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்றும், அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில் போஒய்ப் பெறுவ எவன் என்றும் கூறியுள்ளது கற்பின் மேலோங்கிய தன்மையைக் காட்டுகிறது. மேலும், அகத்தின் மற்றொரு பிரிவான களவு என்பது தலைவன் தலைவியின் காதல் வாழ்க்கையைக் குறிப்பதாகும். களவு வாழ்வின் நெறி அக்களவினைக் கற்பாக மாற்றுவது ஆகும். அவ்வகையில் அகநூலான ஐங்குறுநூறு குறிஞ்சித்திணையின் வழி அகத்தின் பிரிவுகளுள் ஒன்றான களவு வாழ்வின் வாழ்வியல் நெறிகளை ஆய்வதே இக்கட்டுரையாகும்.

## களவின் நிலைகள்

பொருள் இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் திருமண முறை பற்றி கூறும்போது

"வெளிப்பட வரைதல் படாமை வரைதலென்

றாயிரண் டென்ப வரைத லாறே" (நூற்.138)

என்று கூறுவதன் மூலம் களவு பரவலானச் சமுதாயச் செயற்பாடாக இருப்பதையும்,

"மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு

மருவின் இனிய வுளதோ"

என்னும் அடிகள் அக்காலச் சூழலில் கற்பே அகவாழ்வின் நெறியாக விளங்கியது என்பதை வழி பெற முடிகிறது. இதனடிப்படையில் களவு வாழ்வை நோக்கும் போது தலைவன் தலைவி திருமணமானது,

1) அறத்தொடு நிற்றல்

2) வெறியாட்டு

என்பனவும் பிறவும் தொடர்பு கொண்டுள்ளதை உணர முடிகிறது.

## பிரிவு

அகவாழ்வில் தலைவன் தலைவிக்கு இடையில் ஏற்படும் பிரிவானது முறையே ஓதல் பிரிவு, காவல் பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயின் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு என கூறப்படுகின்றது. ஆயின், களவு வாழ்வினைப் பொருத்தவரை தலைவன் தலைவிக்குமான பிரிவாக,

"வெளிப்படை தானே கற்பினோடு ஒப்பினும்

ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக

வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை".(நூற்.139)

என்னும் நூற்பா களவொழுக்கத்தின் வெளிப்பாடு, இல்லற வாழ்க்கை ஆகிய கற்பிற்கு வழி வகுக்கும். எனவே திருமணத்திற்கு முன்னர்த் தலைவனுக்கு ஓதற்பிரிவு, பகைப்பிரிவு, தூதுப்பிரிவு என்னும் மூன்று பிரிவுகள் நிகழ்வதில்லை என்றும், திருமணத்திற்கு முன் பொருள் தேடுவதற்காகத் தலைவியைப் பிரிவான் என்றும் கூறுகிறது.[1] அன்றியும் தோழியின் அறிவுறுத்தலின் பெயரில் ஊரார் அலரின் பொருட்டு தலைவன் தலைவியைச் சிறிது காலம் பிரிவான். அவை முறையே,

1.வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்

2.ஒருவழி தணத்தல்

எனச் சுட்டப்படுகிறது.

## வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்

களவு வாழ்வைக் கற்பாக்க விரும்பிய தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்துப் பொருள் தேடிச் செல்வதே வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல் ஆகும். பொதுவாக இந்த பிரிவு காலம் இரண்டு மாதங்களாக வரையறுக்கப்படுகிறது.

1) பிரிவுழிக் கலங்கல் - கருங்கால் வேங்கை மாத்தகட்டு ஒள்வீ (ஐங்.219), மந்திக் கணவன் கல்லாக் கணவன் (ஐங்.274) 2) வந்துழி மகிழ்தல் - பெருவரை வேங்கைப் பொன்மருள் நறுவீ (ஐங்.217), நன்பொன் அன்ன புனிறுதீர் ஏனல் (ஐங்.263), கிழங்குஅகழ் கேழல் உழுத சிலம்பில் (ஐங்.270), மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும் (ஐங்.291) 3) குறித்த காலம் நீட்டித்து வருதல் - அம்ம, வாழி தோழி நம்மலை நறுந்தண் சிலம்பின் நாறுகுலைக் காந்தள் (ஐங்.226), வருவது கொல்லோ தானே வாராது (ஐங்.295), 4) குறித்த காலத்திற்கு முன்னே வருகுதல் - அம்ம வாழி தோழி நம்மலை வரைஆம் இழியக் கோடல் நீட (ஐங்.223), குன்றக் குறவன் புல்வேய் குரம்பை (ஐங்.252) 5) தமர் வரைவு மறுத்தல் - நுண்ஏர் புருவத்த கண்ணும் ஆடும் (ஐங்.218),6) வரைவொடு வரவு - குன்றக் குறவன் சாந்த நறும்புகை (ஐங்.253), 7) பிரிவு மறுத்தல் - குன்றக் குறவன் கடவுட் பேணி (ஐங்.257) அன்றியும் சுரும்பு உணக் களித்த புகர்முக வேழம் (ஐங்.239) என்னும் பாடலில் பிரிந்த காலத்துத் துன்பத்தையும்,

"அம்ம வாழி! தோழி! நாம்அழப்

பல்நாள் பிரிந்த அறனி லாளன்

வந்தன னோமற்று இரவில்?

பொன்போல் விறல்கவின் கொள்ளும்நின் நுதலே” (ஐங்.229)

என்னும் பாடலில் தலைமகளின் நுதல் பொன் போன்று மிளிர்வதற்கு காரணம் என்ன என்று வரைவிடை வைத்து பிரிந்த தலைமகன் மீண்டான் என்பது அறிந்த தோழி, தான் அறியாததைப் போல் தலைவியை எள்ளி நகையாடுவாதாக அமைகிறது.

அத்தச் செயலைத் துப்புறழ் ஒண்தளிர் (ஐங்.273) என்னும் பாடலிலும் திருமணத்திற்காக பொருளீட்டுவதன் பொருட்டு தலைவன் பிரியுமிடத்து பல்வேறு சூழ்நிலைகளை தோழி அறிவுறுத்துவதான செய்திகளைப் பதிவு செய்கிறது.

## ஒருவழி தணத்தல்

ஊர் பேசும் அலரைப் பொய்யாக்கும் பொருட்டு தலைவன் தலைவியைப் பிரிந்து தன் ஊருக்குச் சென்று பகற்குறி, இரவுக்குறிகளில் வருவதைத் தவிர்ப்பான். இந்த ஒருவழி தணத்தலுக்குக் காலவரையரை என்று ஏதும் இல்லை.

1.தோழிக்கு அறிவுறுத்தல் - சாரல் பலவின் கொழுந்துணர் நறும்பழம் (ஐங்.213),

வருவை அல்லை வாடைநனி கொடிதே

அருவரை மருங்கின் ஆய்மணி வரன்றி

ஒல்லென ஒழிதரும் அருவிநின்

கல்லுடை நாட்டுச் செல்லல் தெய்யோ (ஐங்.233) என்னும் பாடல் பிரிவு உடன்டாத தலைவியும் தோழியும் தலைமகனிடம் கூறுவனவாக அமைந்தது இந்த பாடல்.

2. பிரிவிற்குப் பின் வந்த தலைவனிடம் கூறுவன - அம்ம வாழி தோழி நாளும் (ஐங்.227), யாங்கு வல்லுநையோ ஓங்கல் வெற்ப (ஐங்.231), போதார் கூந்தல் இயலணி அழுங்க (ஐங்.232), பின் இரும் கூந்தல் நல்நுதல் குறமகள் (ஐங்.285), விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை (ஐங்.297), 3.ஒருவழி தணத்தல் நீட்டித்தவிடத்து கூறுவன - அம்ம வாழி தோழி பைஞ்சுனை (ஐங்.225) என்னும் பாடலடிகள் ஊரலர் காரணமாக தலைவன் தலைவியைவிட்டு நீங்க தோழி அறிவுறுத்தலும், தலைவன் நீங்குதலும், பிரிவினை நீட்டித்தவிடத்து தலைவி வருந்துதலும் ஆகிய செய்திகளைப் பதிவு செய்துள்ளது. செலவு அறிவுறுத்தல், உடன்படாமை, உடன்படுத்தல், உடன்படுதல், சென்றுழிக் கலங்கல், தேற்றி ஆற்றுவித்தல், வந்துழி நொந்துரை என்னும் வகைகளில் அமைந்துள்ளது.

## அறத்தொடு நிற்றல்

“அறத்தொடு நிற்றல் என்பதற்குச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி “களவினைத் தமர்க்கு முறையே அறிவுறுத்துகை” என விளக்கமளித்துள்ளது. தலைவி ஏற்கனவே கற்புநெறிப்பட்டுவிட்டாள் என்பதை முதன்மையாக வலியுறுத்துவதே அவள் நோக்கம் என அறம் என்பதைக் கற்பு என்கிறார் வ.சு.ப.மாணிக்கம். இந்த அடிப்படையில் அறம் என்பதற்கு கற்பு எனச் சென்னைப் பல்கலைக்கழக அகராதி பொருள்கொள்ளாத நிலையில் காதல் வழிப்பட்ட நெறியாய் ஒழுக்கநெறியாய் ஏற்றுக்கொள்ளும் நிலையில் அந்தக் காதல் அறத்தையே ஈண்டு அறம் என்றனர் போலும்”[2]. என்று காதலை வெளிப்படுத்தும் நிலையை அறத்தொடு நிற்றல் என்பதற்கான காரணங்களை நம்மால் மேற்கண்ட அறிஞர்களின் கூற்றுகள் வழி உணர முடிகிறது. மேலும், தொல்காப்பியம் “ஐயச் செய்கை தாய்க்கு எதிர் மறுத்துப் பொய் என மாற்ற மெய்வழிக் கொடுப்பினும்” என்று தோழிக் கூற்று நிகழுமிடங்களைக் குறிக்கும் நூற்பாவில் அறத்தொடு நிற்றல் பற்றிய செய்தியைச் சுட்டுகிறது.

அன்னாய் வாழி வேண்டு அன்னை என்னை தானும் மலைந்தான் எமக்கும் தழை ஆயின (ஐங்.201), அன்னாய் வாழி வேண்டு அன்னை என்னை நனி நாண் உடையள் நின்னும் அஞ்சும் (ஐங்.205), அன்னாய் வாழி வேண்டு அன்னை நம்படப்பைத் புலவுச்சேர் துறுகல் ஏறி அவர்நாட்டு....(ஐங்.216), சாத்த மரத்த பூழில் எழுபுகை (ஐங்.212), அலங்குமழை பொழிந்த அதன்கண் அருவி (ஐங்.220), அம்ம வாழி தோழி நம்மூர் நிரந்து இலங்கு அருவிய நெடுமலை நாடன் (ஐங்.228), நாம் உறு துயரம் நோக்க அன்னை, வேலன் தந்தனள் ஆயின் அவ்வேலன் (ஐங்.241), அறியா மையின் வெறியென மயங்கி (ஐங்.242), பெய்ம்மணல் முற்றம் கவின் பெற இயற்றி (ஐங்.248), பொய்படுபு அறியாக் கழங்கே மெய்யே (ஐங்.251), அவரை அருந்த மந்தி பகர்வர் (ஐங்.271) என்னும் பாடல்கள் அறத்தொடு நிற்றல் பற்றிய செய்திகளைப் பதிவு செய்கின்றது. பொதுவாக அறத்தொடு நிற்றல் என்பது அம்பல்,

அலர், இற்செறிப்பு, வெறியாட்டு ஆகியவற்றோடு தொடர்புக் கொண்டுள்ளதையும் இங்கு உணர முடிகிறது.

## வரைவு கடாதல்

திருமணத்தின் விருப்பம் கொண்ட தலைவியும், தோழியும் தலைவனிடம் தலைவியை மணந்துக்கொள்ளுமாறு நேரடியாகவோ, மறைமுகமாகவோ சொல்லி வலியுறுத்துதல் வரைவு கடாதல் ஆகும்.

"வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும்

குரூஉமயிர்ப் புருவை நசையின் அல்கும்

மாஅல் அருவித் தண்பெருஞ் சிலம்ப

நீஇவண் வரூஉங் காலை

மேவரும் மாதோ இவள்நலனே தெய்யோ" (ஐங்.238), என்னும் பாடல்

அன்னையும் அறிந்தனள் அலரும் ஆயின்று (ஐங்.236), மின் அவிர் வயங்கிழை ஞெகிழச் சாஅய் (ஐங்.234), பொய்ய மரபின் ஊர்முது வேலன் (ஐங்.245), குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி (ஐங்.251), நுண்பல் அழிதுளி பொழியும் நாட (ஐங்.251), இளம்பிறை அன்ன கோட்ட கேழல் (ஐங்.264), மந்திக் காதலன் முறிமேய் கடுவன் (ஐங்.276), குரங்கின் தலைவன் குரூஉமயிர்க் கடுவன் (ஐங்.275), குறவர் முன்றில் மாதீண்டு துறுகல் (ஐங்.277), நெடுவரை மிசையது குறுங்கால் வருடை (ஐங்.287) ஆகியன தலைவனிடம் தலைவியை வரைந்து கொள்ள வரையுறுத்துவதாக அமைகின்றது.

## இல்லறம்

பழந்தமிழர் நல்லறங்கள் செய்து நல்ல வழியில் பொருளை ஈட்டி சிறந்த இல்லறத்தை நடத்துவதன் மூலம் சிறந்த வீடு பேற்றினை அடையலாம் என உணர்ந்து அறம், பொருள், இன்பம், வீடு என உறுதிப்பொருட்கள் நான்காகப் பகுக்கப்பட்டன. ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் பெரும்பான்மை களவொழுக்கம் பற்றிய பாடல்களாக இருப்பினும் இல்லற மாண்பு பற்றிய செய்திகளும் அடங்கியுள்ளன.

"அன்னாய், வாழி வேண்டுஅன்னை நம்படப்பைத்

தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு

உவலைக் கூவல் கீழ்

மான்உண்டு எஞ்சிய கலிழி நீரே" (ஐங்.203)

மானுண்டு எஞ்சிய தலைவன் நாட்டு கலங்கிய நீரானது தலைவியின் வீட்டுத் தோட்டத்தில் கிடைக்கும் தேனின் கலந்த பாலினை விட இனியது என்று தலைவியின் இல்லற மாண்பினைப் பதிவு செய்கிறது. அன்றியும்,

"மயில்கள் ஆலப் பெருந்தேன் இமிர

தண்மழை தழீஇய மாமலை நாட

நின்னினுஞ் சிறந்தனள் எமக்கே நீநயந்து

நல்மனை அருங்கடி அயர

எம்நலம் சிறப்பயாம் இனிப்பெற் றோரளே." (ஐங்.292) என்னும் பாடல் இரண்டாம் மணம் பற்றிய செய்திகளை அளிக்கிறது.

## முடிவுரை

தொலைவில் சுற்றமொடு துறவறம் காப்ப என்னும் அகப்பொருள் கொள்கை இங்கு வெளிப்படுவதையும், கற்பு வாழ்வே மேலோங்கிய தன்மைக் கொண்டதாகப் பார்க்கப்பட்டதால் அகவாழ்வின் இருபெரும் கூறுகளும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டத் தன்மையையும், கற்பு வாழ்வை விரும்பி ஏற்க களவில் தோழியின் பங்கினையும் அவற்றோடு களவும், கற்பும் அறமாக பார்க்கப்பட்ட தன்மையையும், கற்பு வாழ்வை விரும்பி ஏற்கும் களவியல் வாழ்வின் வாழ்வியலையும் அறிய முடிகிறது.

## References

ச.வே.சுப்பிரமணியன், (2009) ஐங்குறுநூறு தெளிவுரை, மெய்யப்பன் பதிப்பக வெளியீடு.

பெ.மாதையன், (2010) சங்க இலக்கியத்தில் குடும்பம், முதல் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

ஐங்குறுநூறு ஆய்வுக்கோவை, (2008) இரண்டாம் தொகுதி, சங்க இலக்கிய ஆய்வு மையம், மதுரை

சுபாஷ் சந்திரபோஸ், (2016) தொல்காப்பியம் பொருளதிகாரம், முதற்பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License